# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 570/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.**3 |
| Name | : | மணிகண்டன் (**உதவி ஆய்வாளர்** ) |
| Father's Name / Husband Name | : | **முத்துசாமி** |
| Address | : | **மதுவிலக்கு அமலாக்க பிரிவு, பெரம்பலூர்** |
| Age | : | 43/2026 |

**<u>தேதி : 11/02/2026</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி. ச. மோகனபிரியா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர்

**<u>முதல் விசாரணை</u>**

நான் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 29.06.2025ம் தேதி அன்று மதுவிலக்கு அமலாக்க பிரிவு உதவி ஆய்வாளர் மணிகண்டன் ஆகிய என்னுடன் தலைமை காவலர் ரமேஷ் மற்றும் கிருஷ்ணகுமார் ஆகியோர்களுடன் மதுரோந்து சம்மந்தமாக வாலிகண்டபுரம் பகுதியில் ரெய்டு சென்றுக்கொண்டிருந்போது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி பெரம்பலூர், வாலிகண்டபுரம் திடீர் குப்பம் அருகில் மதியம் சுமார் 12.00 மணிக்கு சோதனை செய்தபோது ஒரு ஆண் நபர் எங்களை கண்டதும் தப்பிக்க முயற்சிசெய்தார். அவரை பிடித்து விசாரித்தபோது முன்னுக்கு பின் முரணாக கூறி அவருடைய பெயர் பாலமுருகன் த/பெ. வெள்ளைசாமி, திடீர் குப்பம், வாலிகண்டபுரம் என்று கூறினார். அவர் இவ்வழக்கின் எதிரிதான். அவர் கையில் வைத்திருந்த பையை வாங்கி உதவி ஆய்வாளர் சோதனை செய்தபோது அந்த பையில் 180 m.l. அளவுள்ள MC Lene பிராந்தி பாட்டில்கள் 29 இருந்தது.

அரசு மதுபான கடை மூடிய பிறகு அதிக விலைக்கு விற்பதற்காக வாங்கி வைத்திருந்ததாக சொன்னார். பின்பு 12.00 மணிக்கு எதிரியை கைது செய்து 12.10 மணிக்கு எதிரியின் உறவினருக்கு கைது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது. 12.30 மணி முதல் 13.30 மணி வரை எதிரி எந்தவித ஆசை வார்த்தையும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் பொதுமக்கள்ள சாட்சி யாரும் முன்வராததால் எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேன். அதன்பிறகு 13.30 மணிக்கு மதுபாட்டில்களை கைப்பற்றி பின்னர் 14.00மணிக்கு அழித்தல் மகசர் மூலம் திறந்து மதுவை கீழே கொட்டி அழித்து சாட்சிகள் முன்னிலையில் அழித்தல் மகசரை நான் தயார் செய்தேன். பொதுமக்கள் சாட்சி யாரும் முன்வராததால் கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசரில் நானும், தலைமை காவலர் ரமேஷ் மற்றும் கிருஷ்ணகுமார் ஆகியோர்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தார்கள். பின்பு எதிரியை 15.30 மணிக்கு காவல் நிலையம் அழைத்துவந்து காவல் நிலைய குற்ற எண். 101/2025 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024ன்படி முதல் தகவல்அறிக்கையை நான் பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரியை தக்க இருநபர் காவலில் நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் சாட்சிகள் தலைமை காவலர்கள் ரமேஷ் மற்றும் கிருஷ்ணகுமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கு கோப்பை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உயர் அதிகாரிகள் புள்ளி விவர கணக்கு காண்பிப்பதற்காக எதிரியின் மீது இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல. எதிரி எந்தவித ஒப்புதல்

வாக்குமூலமும் தரவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எந்த ஒரு வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court read over / interpreted to the witness in the presence of the accused / accused/ pleader and admitted by the witness to be correct

Sd/-.

Judicial Magistrate No.1(FAC)

Perambalur.